(5) of section 23-A proposed in the Bill, seeking to enhance the ceiling limit retrospectively from 15 standard acres to 30 standard acres

In accordance with the above direction, I, Bhisma Narain Singh, Governor of Tamil Nadu, hereby return the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1990, to the State Legislative Assembly for reconsidering the provisions contained in sub-section (5) of the said section 23-A seeking to enhance the ceiling limit retrospectively from 15 standard acres to 30 standard acres, and to make such amendments in the Bill as may be considered necessary."

5. கவன ஈர்ப்பு.

(அ) திருவொற்றியூர் பகுதியில் உள்ள கே.சி.பி. தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்து.

(முற்பகல் 11.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. கே. குப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. குப்பன்.

திரு. கே. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் பகுதியிலுள்ள கே. சி. பி. தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஒரு விவர அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

சென்னையை அடுத்த திருவொற்றியூரிலுள்ள கே. சி. பி. நிறுவனத்தில் 509 தொழிலாளர்களும், 285 பணியாளர்களும் உள்ளனர். கே. சி. பி. எம்ப்ளாயீஸ் யூனியன் என்னும் தொழிற்சங்கம் இந்நிறுவனத்தில் செயல்படுகிறது.

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1991 அக்டோபர் 1

இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகள் குறித்து இரு தரப்பினரிடையே பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தபோதே 1989-90 ஆம் ஆண்டுக்கான போனஸ் பிரச்சினையும் எழுந்தது. இந்த பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை அடுத்து தொழிலாளர்கள் நிர்வாகத்துடன் ஒத்துழையாமையை கடைபிடிப்பதாகக் கூறி, நிர்வாகம் 31 தொழிலாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. இத் தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் (Suspension) செய்யப்பட்டு அவர்கள் மீது நிர்வாகம் விசாரணைகள் நடத்தியது. தொழிலாளர் துறை அலுவலர்கள் இரு தரப்பினருடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டனர். ஆனால் எந்த ஒரு உடன்பாடும் ஏற்படாத நிலையில் தொழிலாளர்கள் 26—10—1990 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதை அடுத்து நிர்வாகம் 30—10—1990 முதல் கதவடைப்பு (Lock out) செய்தது.

இதன் பிறகு தொழிலாளர் இணை ஆணையர் சமரசப் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்ட போதிலும் வேலை நிறுத்தமும் கதவடைப்பும் தொடர்ந்தது. இணை ஆணையர், தாவா சம்பந்தப்பட்ட அனைத்துக் கோரிக்கைகள் குறித்து தொழில் தகராறு சட்டத்தின் கீழ் சமரச முறிவறிக்கை ஒன்றை அரசுக்கு சமர்ப்பித்தார். சமரச முறிவறிக்கையில் அடங்கிய கோரிக்கைகளில் 21 கோரிக்கைகளை அரசு சென்னை தொழில் தீர்ப்பாயத்தின் Idustrial Tribunal தீர்ப்புக்கு அனுப்பி ஆணை பிறப்பித்தது. பிற கோரிக்கைகளை நீதிமன்றத் தீர்ப்புக்கு விடத் தகுதியில்லை எனவும், அரசு ஆணை பிறப்பித்தது. இவை தவிர ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள 29 தொழிலாளர்கள் தவிர ஏனைய தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், நிர்வாகம் கதவடைப்பை நீக்க வேண்டும் எனவும், 29 தொழிலாளர்கள் மீது எடுக்கப்பட்டு வரும் ஒழுங்கு நடவடிக்கையை விரைவில் எடுத்து முடிக்க வேண்டும் எனவும் பணிந்து தொழிற் தகராறு சட்டப்பிரிவு 10-பின்கீழ் ஆணை ஒன்றையும் அரசு பிறப்பித்தது.

இத்தாவா குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடந்தபோது, சில தொழிலாளர்கள் ஒழுங்கு மீறி நடந்து கொண்டதாக 29 தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது

1991 அக்டோபர் 1] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. இத்தொழிலாளர்கள் மீது நிர்வாகம் விசாரணை நடத்தி வந்தமையால், இப்பிரச்சினை குறித்து அரசு ஆணை ஏதும் பிறப்பிக்கவில்லை. தவிர, நிர்வாகம் கதவடைப்பை நீக்க வேண்டும் என அரசு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 10பி-ல் இட்ட ஆணையில் மேற்குறிப்பிட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட 29 தொழிலாளர்களைத் தவிர பிற தொழிலாளர்கள் அனைவரையும் நிர்வாகம் வேலைக்கு அனுமதிக்க வேண்டும் என அரசு பணித்தது. அரசு பிறப்பித்த இந்த உத்தரவுப்படி நிர்வாகம் கதவடைப்பை 13—5—1991 முதல் நீக்கியது.

ஆயினும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் 29 தொழிலாளர்களையும் வேலைக்கு அனுமதிக்க வேண்டும் என வற்புறுத்தி தொழிற் சங்கம் வேலை நிறுத்தத்தை இன்றும் தொடர்ந்து வருகிறது.

இந்தாவா குறித்து இரு தரப்பினருடனும் தொழிலாளர் ஆணையர் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார். தற்போது சட்ட அமைதிப் பிரச்சினை எதுவும் இல்லை.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற விவர அறிக்கையை நான் படித்துள்ளேன். இருந்தாலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தொழிலாளர்களுடைய நலத்திலே அக்கறையுள்ள இந்த அரசு, அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிகின்ற 520 தொழிலாளர்களுக்காக, கே.சி.பி. நிறுவனத்தோடு பேசி அனைவரும் வேலைக்குச் செல்ல மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து இரு தரப்பினருடனும் தொழிலாளர் நல ஆணையர் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார். அது வெற்றிகரமாக முடியுமென்று நான் நம்புகிறேன்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வெற்றிகரமாக முடியுமென்று சொன்ன சொல்லை நான் ஏற்று இந்தப் பிரச்சினையை மிக விரைவிலே முடித்து, 11 மாதகாலமாக வாடிக் கொண்டிருக்கிற 520 குடும்பங்களுக்கும் நல்லதொரு செய்தியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசு 100-வது நாளைக் கொண்டாடுகின்ற இந்த நன்னாளில் நல்ல செய்தியை அறிவித்த மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.

(ஆ) செங்கம் தொகுதியில் சில பகுதிகளில் நிலவிவரும் குடி-நீர் பற்றாக்குறையைப் போக்க ஜப்தி காரியந்தல் ஆற்றில் உள்ள கிணற்றை அகலப்படுத்துவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் பெ. வீரபாண்டியன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் பெ. வீரபாண்டியன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இந்த மின் விளக்குகளைவிட பளிச்சென்று அமர்ந்திருக்கும் நம்முடைய இதய தெய்வம் 100-வது நாள் காண்கிறது. 100 நாள் என்ன, நிச்சயமாக 100 ஆண்டுகள் வாழத்தான் போகிறீர்கள், ஆளத்தான் போகிறீர்கள். நம்முடைய இதய தெய்வத்தின் நல்லாட்சியில் மக்களின் .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வீரபாண்டியன், அதிலே இருக்கிறதை அப்படியே படியுங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: படிக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை நிகழ்ச்சி நிரலில் இருக்கிறதைப் படியுங்கள்.